TNVR230046972024

சார்பு நீதிமன்றம், இராஜபாளையம்.

முன்னிலை–திரு. M. சண்முகவேல்ராஜ், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,

சார்பு நீதிபதி, இராஜபாளையம்.

2026 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06 ஆம் நாள் சனிக்கிழமை.

O.S. No. 1463/2024

(CNR No.TNVR230046972024)

கனரா வங்கி,
தளவாய்புரம் கிளை,
அதன் மேலாளர் மூலமாக ... வாதி

//எதிர்//

1.M.சுந்தர்
2.R.முருகேசன் ... பிரதிவாதிகள்

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் கடந்த 17.12.2026 ம் தேதி அன்று அ.வ.எண்.1463/2024 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு 24.04.2026–ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்த போது, வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.உமாபதி அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.ரவிராஜ் அவர்கள் ஆஜராகி, பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டு எழுவினாக்கள் வனையப்பட்டு வாதி தரப்பு குறுக்குவிசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்த நிலையில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று பதிவு

செய்யப்பட்டும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் முன்னிலை ஆகாததாலும், பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டு, வாதி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டு, சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றை நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து, வாதி தரப்பு வாதத்தை கேட்டு இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனையிலிருந்து இந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்....

தீர்ப்புரை

1) **வழக்கின் தன்மை:–**

பிரதிவாதிகள், தாவா கடன் தொகையான ரூ.3,46,621/– ஐ வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் ஆண்டுக்கு 11.70% பின்வட்டியுடன் வழங்க வேண்டும் என்றும், தாவா செலவுத் தொகை கேட்டும் மற்ற இதர பரிகாரங்கள் வழங்கக்கோரியும் வாதி வங்கியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **வழக்குரையின் சுருக்கம்** :-

வாதி வங்கியானது சட்டப்படி அமைக்கப்பட்ட பொதுத்துறை அமைப்பாகும். வாதி வங்கியின் மேலாளராக இருந்து வழக்கு சம்பந்தமான ஆவணங்களில் கையெழுத்திடவும், ஆய்வு செய்யவும் அதிகாரம் பெற்றவர் ஆவார். 1ம் பிரதிவாதியின் உயர்கல்விக்காக பிரதிவாதிகள் கடந்த 19.09.2014–ம் தேதி வாதியின் வங்கியை அணுகி உயர்கல்வி பயில்வதற்காக கடன் கேட்டு விண்ணப்பம் செய்ததன் அடிப்படையில், பிரதிவாதிகளின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த வாதி வங்கி 08.12.2014–ம் தேதியில் நிபந்தனைகளுடன் 1ம் பிரதிவாதி உயர்கல்வி

பயில்வதற்காக ரூ.2,05,800/– கல்வி கடனை அனுமதித்து அரேஞ்மெண்ட் கடிதம் கொடுத்துள்ளது. வாதி வங்கியின் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு 1ம் பிரதிவாதி உயர்கல்வி பயில்வதற்காக வாங்கிய கடனுக்கு வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் 08.12.2014–ம் தேதியில் கடன் ஒப்பந்தம் உள்ளிட்ட ஆவணங்கள் எழுதி கொடுத்துள்ளார்கள். வங்கியின் விதிமுறைகளின்படி பிரதிவாதிகள் கல்வி கடன் தொகையை ஆண்டுக்கு 11.70% வட்டியுடன் 120 மாத தவணைகளில் திருப்பி செலுத்த வேண்டும். அதன்பின்னர் பிரதிவாதிகள் வாதி வங்கியிடம் ஒப்புக்கொண்டபடி கடனை திருப்பிச் செலுத்தவில்லை. கடந்த 23.11.2024ம் தேதிய கணக்கின்படி பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு ரூ.3,44,523/– மற்றும் 24.11.2024 முதல் 12.12.2024 வரை வட்டி தொகை ரூ.2,098.17/– மொத்தம் ரூ.3,46,621/– பாக்கி செலுத்த வேண்டும். பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையை திருப்பிச் செலுத்தாததால் வாதி வங்கியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரை சுருக்கம்**:-

தாவா பிராதில் இந்நிர் பிரதிவாதிகளால் குறிப்பாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனைய சங்கதிகள் யாவற்றையும் இந்நிர் பிரதிவாதிகள் பொய்யென மறுக்கிறார்கள். வாதியின் வழக்கு சட்டப்படிக்கும், நியாயப்படியும், செல்லத்தக்கதல்ல. எடுத்த எடுப்பிலேயே தள்ளுபடி செய்யப்படவேண்டிய வழக்காகும். பிராது 3, 4 பாராக்களில் கண்டுள்ள சங்கதிகளை இந்நிர் பிரதிவாதிகள் ஒப்புக்கொள்கிறார்கள். இந்நிர் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதியின் மகன் ஆவார். பிராது 5வது பாராவில் ஏதோ

இந்நிர் பிரதிவாதிகள் 1ம் பிரதிவாதியின் கல்விக்கடனுக்காக வாதியின் வங்கி வசம் கடன் கேட்டு விண்ணப்பித்தார் என்றும், அதற்காக 19.09.2014ம் தேதியில் இந்நிர் பிரதிவாதிகள் கையெழுத்திட்டார்கள் என்றும், அதன் அடிப்படையில் 08.12.2014ம் தேதியில் மேற்படி கடன் தொகையானது வங்கியின் குறிப்பாணையின் மூலம் வழங்கப்பட்டது என்றம், அதன் அடிப்படையில் ரூ.2,05,800/-வழங்கப்பட்டது என்று கூறியிருப்பதை இந்நிர் வாதியே கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். அவ்வாறு இந்நிர் பிரதிவாதிகளுக்கு கல்வி கடன் தொகை எதுவும் வாதியால் வழங்கப்படவில்லை. வாதியிடம் 1ம் பிரதிவாதிக்கு கல்வி கடன் வாங்கவேண்டிய அவசியம் ஏதும் இல்லை. மேலும் மேற்படி கல்விக்கடன் தொகையானது இந்நிர் 1ம் பிரதிவாதிக்கு தவணைகளாக வாதியால் 5 தவணைகளாக கொடுக்கப்பட வேண்டுமென்று ஒப்புகொள்ளப்பட்டது என்றும், மேலும் அதற்குண்டான வட்டித்தொகை இந்நிர் பிரதிவாதிகளால் திரும்ப செலுத்தப்படும்வரை அதன்பின்பு 08.12.2014 பின்பு 11.70%, கூட்டுவட்டியாக செலுத்தப்படவேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டு மேற்படி விபரம் கல்விக்கடனுக்குண்டான ஒப்பந்ததிலும், வங்கியின் கணக்கு புத்தகத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற சங்கதியை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இந்நிர் பிரதிவாதிகள் வாதியின் வங்கியில் யாதொரு கல்விக் கடன் தொகையும் பெறாதகாரணத்தினால் வட்டித்தொகை செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. பிராது 6வது பாராவில் இந்நிர் பிரதிவாதிகளும் வாதியின் வங்கியும் 08.12.2014ம் தேதியில் கடன் ஒப்பந்தப்பத்திரம் (Lone agreement) எழுதிக்கொண்டார்கள் என்றும், மேற்படி காலகட்டத்தில் 1ம் பிரதிவாதி மைனராக இருந்தார்

என்றும், அதன்பின்பு 1ம் பிரதிவாதி உரிய வயதை அடைந்தபின்பு மேற்படி கடனை ஒப்புக்கொண்டு வாதியின் வங்கிக்கு ஓர் ஒப்புதல் கடிதம் எழுதிக்கொடுத்தார் என்றும், அதன்பின்பு மேற்படி கடன்தொகையானது 120 மாத தவணைகளாக திருப்பி செலுத்தவேண்மென்றும், மேலும் மேற்படி மாதத்தவணையான 168 மாதங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டுமென்று ஒப்புக்கொள்ளப்பட்டது என்று பிராதில் கூறியிருப்பதை இந்திர் பிரதிவாதிகள் பொய்யென மறுக்கிறார்கள். இந்நிர் பிரதிவாதி ஒரு பொழுதும் வாதியின் பெயருக்கு கடனை ஒப்புக்கொண்டு ஒப்புதல் எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. மேற்படி ஒப்புதல் கடிதத்தில் உள்ள கையொப்பம் இந்நிர் 1ம் பிரதிவாதியின் கையொப்பம் இல்லை. மேற்படி ஒப்புதல் கடிதத்தில் உள்ள கையொப்பம் வாதியால் உற்பத்தி செய்யப்பட்ட போர்ஜரி கையொப்பம் ஆகும். இந்நிர் 1ம் பிரதிவாதி ஒருபொழுதும் 120 மற்றும் 168 மாதத்தவணைகள் செலுத்துவதாக ஒப்புக்கொள்ளவில்லை. இந்நிர் 1ம் பிரதிவாதி தனது பெயரில் வாதியின் வங்கியில் எவ்விதமான கணக்கு வழக்குகளை பராமரித்து வரவில்லை. வாதி பிராதில் கூறியுள்ள கணக்கு வழக்குகள் முறையான வங்கி கணக்கு வழக்குகள் அல்ல. மோசடியான கணக்கு வழக்குகள் ஆகும். பிராது 7வது பாராவில் கடனை திருப்பி செலுத்தும் கால அளவானது இந்நிர் 1ம் பிரதிவாதி தன்னுடைய கல்வியாண்டை முடித்தபின்பு ஆரம்பிக்கும் என்றும், மேற்படி காலதவணையானது 2019ம் ஆண்டில் முடிவடைகிறது என்றும், மேற்படி காலகட்டத்திற்குள் செலுத்த பட்ட தொகைகள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் என்றும், கூறியிருப்பதை வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். இந்நிர் 2ம் பிரதிவாதி கடன் தொகையை

ஒப்புக்கொண்டு 1ம் பிரதிவாதியின் அனுமதியின் பேரில் 15.09.2019ம் தேதியில் ஒப்புதல் கடிதம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றும் அதேபோல 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு தெரிந்தே 10.09.2022ம் தேதியில் வாதியின் பெயருக்கு ஒப்புதல் கடிதம் எழுதிக்கொடுத்தார் என்று கூறியிருப்பதை வாதியே கண்டிப்பாக நிரூபிக்க கடமைப்பட்டவர் ஆவார். 15.09.2019ம் தேதியில் இந்நிர் 2ம் பிரதிவாதி எவ்விதமான ஒப்புதல் கடிதமும் வாதியின் வங்கிக்கு எழுதிக்கொடுக்கவில்லை. மேற்படி ஒப்புதல் கடிதத்தில் உள்ள கையொப்பம் இந்நிர் 2ம் பிரதிவாதியின் கையொப்பம் அல்ல, மேற்படி கையொப்பம் வாதியின் வங்கி அதிகாரிகளால் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்ட கையொப்பம் ஆகும். 10.09.2022ம் தேதியில் ஒப்புதல் கடிதத்தில் உள்ள கையொப்பம் இந்நிர் 1ம் பிரதிவாதியின் கையொப்பம் அல்ல. மேற்படி கையொப்பம் வாதியின் வங்கி அதிகாரிகளால் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்ட கையொப்பம் ஆகும். இந்நிர் வாதி இந்நிர் பிரதிவாதிகளுக்கு 02.01.2023ம் தேதியில் தனது வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்பது உண்மை. மேற்படி அறிவிப்பில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மைக்கு மாறானவையாக இருந்த காரணத்தினாலும் இந்நிர் பிரதிவாதிகள் வாதியின் வங்கியில் எவ்விதமான கடன் தொகையும் பெறாத காரணத்தினாலும் பதில் ஏதும் அனுப்பவில்லை. பிராது 8வது பாராவில் கூறியுள்ளது போல இந்நிர் வாதியின் வங்கி கொடுத்துள்ள கடன்தொகையானது வியாபார நடவடிக்கையின் அடிப்படையில் கொடுக்கப்பட்ட கடன் தொகை என்று கூறியிருப்பது ஏற்றுக்கொள்ளக்கூடியதல்ல. ஏனெனில் இந்நிர் பிரதிவாதிகள் வாதியின் வங்கியில் எவ்விதமான கடன்தொகையும் பெறவில்லை. வாதிக்கு வழக்கு

தாக்கல் செய்ய எவ்விதமான வழக்கு மூலமும் இல்லை. பிராதுடன் வாதி தாக்கல் செய்துள்ள 1 முதல் 10 ஆவணங்கள் வழக்கிற்காக இந்நிர் வாதியின் வங்கியால் இந்நிர் பிரதிவாதியின் பெயரில் போர்ஜரியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் ஆகும். மேற்படி ஆவணங்கள் இந்நிர் பிரதிவாதிகளை எவ்வித்திலும் கட்டுப்படுத்தாது. வழக்கில் கோரியுள்ள பரிகாரங்கள் வாதிக்கு கிடைக்கக்கூடியதல்ல. எனவே தாவா வழக்கினை பிரதிவாதிகளின் செலவு தொகையுடன் வாதியின் வழக்கை தள்ளுபடி செய்ய கோரி எதிர்வழக்குரை தாக்கல்.

4) பிராது, எதிர்வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலித்து வழக்கு விசாரணைக்காக கீழ்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளன.

1. Whether the plaintiff is entitled to recovery of Rs.3,46,621/- with future interest at the rate of 11.70% per annum with monthly rests from 17.12.2024 till the date of realization of entire amount from the defendants?

2) To what other reliefs the plaintiff entitled to?

5) வழக்குரை, எதிர்வழக்குரை நன்கு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சியங்களும், சான்றாவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டன. வாதி தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. வாதி தரப்பில் தனது தரப்பு வழக்கை நிரூபிக்கும் வகையில், வாதி தரப்பில் வா.சா.1 சாட்சி விசாரணை செய்யப்பட்டு, வாதி தரப்பு சான்றாவணங்களாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரையிலான சான்றவாணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை. மாறாக, பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாகியுள்ளார்கள்.

6) கடந்த 24.04.2026 தேதியில் வழக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்ட நிலையில், வாதி தரப்பு சாட்சியாக வா.சா.1 முதல்விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்து வாதி தரப்பு சான்றாவணங்கள் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10 வரை குறியீடு செய்யப்பட்டு, விசாரணை செய்யப்பட்டுள்ளார். வழக்கு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணைக்காக 24.04.2026 தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. மேற்படி தேதியில் பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜராகி பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று பதிவு செய்யப்பட்டும், பிரதிவாதிகளை திறந்த நீதிமன்றத்தில் அழைத்த போது அவர்கள் முன்னிலையாகததால் அவர்கள் தோன்றா தரப்பினர்களாக அறிவிக்கப்பட்டார்கள். வாதி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு வாதுரை கேட்கப்பட்டது.

7) வாதி தரப்பில் முன்னிலையான கற்றிந்த வழக்கறிஞர் வழக்கு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டு இருப்பதாலும், பிரதிவாதிகள் தரப்பு அதை மறுத்தளித்து சாட்சியம் எதுவும் அளிக்காததாலும் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுமெனவும், பிரதிவாதிகளுக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், பிரதிவாதிகள் வழக்கு நடவடிக்கைகளில் முழுவதுமாக கலந்து கொண்டு, வாதி தரப்பு சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்ய வழக்கு ஒத்தி வைக்கப்பட்ட போது நீதிமன்றத்தில் முன்னிலையாகாமல், இந்த வழக்கினை மேலும் கால தாமதப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்தில் பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்டதாக வாதி தரப்பில் வாதிடப்பட்டது. எனவே, இந்த வழக்கை ஏற்கனவே வாதி தரப்பு சாட்சியை பிரதிவாதிகள் தரப்பில்

குறுக்குவிசாரணை செய்ய போதிய அவகாசம் அளித்தும், விசாரணை செய்ய முன்னிலையாகாமல் பிரதிவாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டு கீழ்கண்டவாறு தீர்ப்பளிக்கப்படுகிறது.

8) **<u>எழுவினா 1 க்கான தீர்வு</u>**:–

வழக்குரை, எதிர்வழக்குரை நன்கு கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட சாட்சியங்களும், சான்றாவணங்களும் பரிசீலனை செய்யப்பட்டன. வாதுரை கேட்கப்பட்டது. வாதி தரப்பில் முன்னிலையான கற்றறிந்த வழக்குரைஞர் கடந்த 19.09.2014–ம் தேதி பிரதிவாதிகள், 1ம் பிரதிவாதி உயர்கல்வி பயில்வதற்காக வாதியின் வங்கியில் கல்வி கடன் கேட்டு விண்ணப்பித்தன் பேரில், 08.12.2014ம் தேதி வாதி வங்கி கல்வி கடனாக ரூ.2,05,800/–ஐ அனுமதித்ததை பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள், மேற்படி கடன் தொகைக்கு ஆதரவாக பிரதிவாதிகள் வா.சா.ஆ.3 ஆக கடந்த 08.12.2014ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதியால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட கடன் ஒப்பந்தம் அசல். வா.சா.ஆ.4 ஆக 08.12.2014ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதியால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வட்டி ஒப்பந்தம் அசல். வா.சா.ஆ.5 ஆக 08.12.2014–ம் தேதியிட்ட 2ம் பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்ட உயிர்ப்பிப்பு கடிதம் அசல். வா.சா.ஆ.6 ஆக 01.09.2022ம் தேதியிட்ட 1–ம் பிரதிவாதியால் எழுதிக்கொடுக்கப்பட்ட உயிர்ப்பிப்பு கடிதம் அசல். வா.சா.ஆ.7 ஆக 02.01.2023ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது அலுவலக நகல். வா.சா.ஆ.8 ஆக 03.01.2023ம் தேதியிட்ட ஒப்புதல் அட்டை (2 எண்ணம்) அசல், வா.சா.ஆ.9 ஆக 05.12.2024ம் தேதியிட்ட

வங்கி கணக்கு அறிக்கை நகல், வா.சா.ஆ.10 ஆக வட்டி கணக்கீடு மெமோ ஆகியவை குறியீடு செய்யப்பட்டுள்ளன என்றும், பிரதிவாதிகள் கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்றும், மேற்படி தாவா கடன் தொகையை பிரதிவாதிகள், வாதி வங்கிக்கு செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்றும், வழக்கு வாதி தரப்பில் தகுந்த சாட்சியம் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்பட்டிருப்பதால் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டுமென்றும் வாதிட்டார்.

9) வழக்கு கோப்பில் உள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. வாதியின் குறிப்பிடத்தகுந்த வழக்கு என்னவென்றால், பிரதிவாதிகள் கடந்த 19.09.2014 –ம் தேதி 1–ம் பிரதிவாதியின் உயர்கல்வி பயில்வதற்காக வாதியின் வங்கியில் கல்வி கடன் கேட்டு விண்ணப்பித்ததன் பேரில், 08.12.2014–ம் தேதி வாதி வங்கி கல்விக்கடனாக ரூ.2,05,800/–ஐ அனுமதித்ததைப் பெற்றுக்கொண்ட பிரதிவாதிகள், மேற்படி கடன் தொகையை திருப்பி செலுத்தவில்லை என்பது தான். மேற்படி சங்கதியை நிரூபிக்கும் வகையில் வாதி வங்கியின் மேலாளர் இந்த வழக்கில் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்திருக்கிறார்.

10) வா.சா.1 தனது முதல்விசாரணை சாட்சியத்தில், "வாதி வங்கியானது சட்டப்படி அமைக்கப்பட்ட பொதுத்துறை அமைப்பாகும் என்றும், வாதி வங்கியின் முதன்மை அதிகாரியாக இருந்து வழக்கு சம்பந்தமான ஆவணங்களில் கையெழுத்திடவும், ஆய்வு செய்யவும் அதிகாரம் பெற்றவர் ஆவார் என்றும், 1ம் பிரதிவாதி உயர்கல்வி பயில்வதற்காக 1,2 பிரதிவாதிகள் கடந்த 19.09.2014–ம் தேதி தங்கள் வங்கியை அணுகி கல்வி கடன் கேட்டு விண்ணப்பம் செய்ததன் அடிப்படையில்,

பிரதிவாதிகளின் விண்ணப்பத்தினை பரிசீலனை செய்த தங்கள் வங்கி 08.12.2014 ம் தேதியில் நிபந்தனைகளுடன் 1ம் பிரதிவாதியின் உயர்கல்வி பயில்வதற்காக ரூ.2,05,800/ கல்வி கடனை அனுமதித்து அரேஞ்மெண்ட் கடிதம் கொடுத்துள்ளது என்றும், தங்கள் வங்கியின் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு 1ம் பிரதிவாதி உயர்கல்வி பயில்வதற்கு தங்கள் வங்கிக்கு பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு 08.12.2014–ம் தேதியிட்ட கடன் ஒப்பந்தம் உள்ளிட்ட இதர ஆவணங்கள் எழுதிக்கொடுத்துள்ளார்கள். வங்கியின் விதிமுறைகளின்படி பிரதிவாதிகள் கல்வி கடன் தொகையை ஆண்டுக்கு 10.70% வட்டியுடன் 120 மாத தவணைகளில் திருப்பி செலுத்த வேண்டும். அதன்பின்னர் பிரதிவாதிகள் தங்கள் வங்கியிடம் ஒப்புக்கொண்டபடி கடனை திருப்பிச் செலுத்தவில்லை என்றும், கடந்த 23.11.2024–ம் தேதிய கணக்கின்படி பிரதிவாதிகள் தங்கள் வங்கிக்கு ரூ.3,44,523/– மற்றும் 24.11.2024 முதல் 12.12.2024 வரை வட்டி தொகை ரூ.2,098.17 மொத்தம் ரூ.3,46,621/– பாக்கி செலுத்த வேண்டும் என்றும், பிரதிவாதிகள் மேற்படி கடன் தொகையை திருப்பிச் செலுத்தாததால் தங்கள் வங்கியால் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சாட்சியம் அளித்துள்ளார்.

11) பிரதிவாதிகளுக்கு போதிய வாய்ப்பு அளிக்கப்பட்டும், பிரதிவாதிகள் வழக்கு நடவடிக்கைகளில் முழுவதுமாக கலந்து கொண்டு, வாதி தரப்பு சாட்சிகளை குறுக்குவிசாரணை செய்ய முன்வராதது வழக்கினை மேலும் காலதாமதப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் பிரதிவாதிகள் தரப்பில் செய்யப்பட்டிருப்பதாக வாதி தரப்பில் செய்த வாதம் ஏற்கத்தக்கதாக இருப்பதாக இந்த நீதிமன்றம் கருதுகிறது.

12) வாதி தரப்பு சாட்சியத்தையும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.10

வரையிலான ஆவணங்களை பரிசீலனை செய்ததில், பிரதிவாதிகள் வாதி வங்கியிடமிருந்து ரூ.2,05,800/-ஐ கடனாக பெற்றுக்கொண்டு, அதனை வட்டியுடன் திருப்பிச் செலுத்துவதாக ஒப்புக் கொண்டு, கடன் ஒப்பந்தம் உள்ளிட்ட இதர ஆவணங்கள் எழுதிக் கொடுத்தும், பிரதிவாதிகள் மாத தவணைகளை சரியாக செலுத்தவில்லை என்றும், கடந்த 23.11.2024-ம் தேதிய கணக்கின்படி பிரதிவாதிகள் தங்கள் வங்கிக்கு ரூ.3,44,523/- மற்றும் 24.11.2024 முதல் 12.12.2024 வரை வட்டி தொகை ரூ.2,098.17 மொத்தம் ரூ.3,46,621/- என்றும், மேற்படி தொகையை பிரதிவாதிகள் திருப்பிச் செலுத்தவில்லை என்பதும் தெரிய வருகின்றது. பிரதிவாதிகளை பொறுத்த வரையில் வாதியின் வழக்கை மறுத்தளித்து தங்கள் வழக்கை முன்னெடுத்து செல்லவில்லை. பிரதிவாதிகள் தோன்றாத் தரப்பினர்களாக உள்ள நிலையில், வாதி வங்கி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், வாதி தரப்பு வழக்கு நிரூபிக்கப்பட்டிருப்பதால் பிரதிவாதிகள் தாவா கடன் தொகையைச் செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பதாலும் வாதி வங்கி கோரியுள்ள பரிகாரமானது வாதி வங்கிக்கு கிடைக்கத்தக்கது என்று தீர்மானிக்கப்படுகிறது. எனவே, எழுவினா 1ஐ பொறுத்து வாதிக்கு ஆதரவாக இந்நீதிமன்றம் தீர்வு காண்கின்றது.

<u>எழுவினா 2</u>:-

எழுவினா 1 வாதிக்கு ஆதரவாக தீர்மானம் செய்யப்பட்ட நிலையில், எழுவினா 2ஐ பொறுத்து இந்த வழக்கு அனுமதிக்கப்பட்டு கீழ்க்கண்ட பரிகாரங்களை வாதிக்கு வழங்கி இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.

13) இறுதியாக,

1) வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது.

2) பிரதிவாதிகள் வாதி வங்கிக்கு ரூ.3,46,621/—ஐ செலுத்த வேண்டும் என்றும், மேற்படி கடன் தொகைக்கு வழக்கு தாக்கல் செய்த நாள் முதல் தீர்ப்பாணை காலம் வரைக்கும் 9% ஆண்டு வட்டியுடனும், தீர்ப்பாணை தேதி முதல் தொகை வசூலாகும் தேதி வரைக்கும் 6% ஆண்டு வட்டியுடன் செலுத்த வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இத்தீர்ப்பானது, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு, 2026 ம் ஆண்டு ஜுன் திங்கள் 06 ம் நாள் (06.06.2026) இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

SHUNMUGAVEL RAJ Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.

<u>வாதி தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சி</u>:-

வா.சா.1 - அருண்மொழி (வாதி வங்கி மேலாளர்)

<u>வாதி தரப்பில் குறியீடு செய்யப்பட்ட சான்றாவணங்கள்</u>:-

வா.சா.ஆ. 1	19.09.2014	பிரதிவாதிகள் கல்வி கடன் கேட்டு வாதியிடம் கொடுத்த விண்ணப்பம் அசல்.
வா.சா.ஆ.2	08.12.2014	பிரதிவாதிகளுக்கு கல்வி கடனை அனுமதித்து வாதி வங்கி வழங்கிய Sanction Memorandam அசல்.
வா.சா.ஆ.3	08.12.2014	2 ம் பிரதிவாதியால், வாதி வங்கிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட கடன் ஒப்பந்தம் அசல்.

வா.சா.ஆ.4	08.12.2014	2 ம் பிரதிவாதியால் வாதி வங்கிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வட்டி ஒப்பந்தம் அசல்.
வா.சா.ஆ.5	08.12.2014	2 ம் பிரதிவாதியால் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட உயிர்ப்பிப்பு கடிதம் அசல்.
வா.சா.ஆ.6	10.09.2022	1 ம் பிரதிவாதியால் வாதி வங்கிக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட உயிர்ப்பிப்பு கடிதம் அசல்.
வா.சா.ஆ.7	02.01.2023	வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது அலுவலக நகல்.
வா.சா.ஆ.8	03.01.2023	ஒப்புதல் அட்டை (2 எண்ணம்) அசல்,
வா.சா.ஆ.9	05.12.2024	வங்கி கணக்கு அறிக்கை நகல்
வா.சா.ஆ.10	09.12.2024	வட்டி விபரம் அசல்.

பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – இல்லை.

SHUNMUGAVEL RAJ Digitally signed by SHUNMUGAVEL RAJ

சார்பு நீதிபதி,
இராஜபாளையம்.